# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.32/2022

PW–1 லதா நாள்.16.10.2025

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

என் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பரவாய் கிராமத்தில் படித்தேன். 1ம் பிரதிவாதி என்கணவராவர். 2ம் பிரதிவாதி என் மகனாவர். இந்த வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு நான் விவரம் செய்தேன். எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் எந்த வருடம் திருமணம் ஆனது என்று வருடம் எனக்கு தெரியவில்லை. எனக்கு தற்போது 64 வயதாகிறது. 17 வயதில் திருமணம் ஆனது. பெரம்பலூரில் கல்யாணமண்டபத்தில் நடந்தது. திருமணம் ஆனபின்னர் நான், என்கணவர் மற்றும் மாமியார் கூட்டுக்குடும்பாக வாழ்ந்தோம். தாவா சொத்தை தவிர வேறு சொத்தை என்மாமியார் என்பெயரில் வாங்கவில்லை. திருமணமாகி மாமியாரோடு வாழ்ந்த வீடு சொந்தவீடாகும். அது பூர்விக வீடாகும். அது மாமனார் பெயரில் இருந்தது. எனக்கு திருமணமாகி முதலில் 2ம் பிரதிவாதி பிறந்தார். அவர் பெரம்பலூரில் மருத்துவமனையில் வைத்து பிறந்தார். வருடம் தெரியாது. 2வது குழந்தை பிரபாவதி 1ம் பிரதிவாதிக்கு 2வயதாகும்போது பிறந்தது. அதற்கு அடுத்து 2வருடம் கழித்து 3வது குழந்தை ரஜினி பிறந்தார். எளம்பலூர் தேர்முட்டி தெருவில் இருந்த வீட்டில் கூட்டுக்குடும்பாக வாழ்ந்துவந்தோம். தற்போது அந்த வீட்டில் குடியிருக்கவில்லை. 15 வருடங்களுக்கு முன்புவரை அந்த வீட்டில் குடியிருந்தேன். அதன்பின்னர் திருப்பூருக்கு சென்று விட்டு கடந்த 10 வருடங்களாக கீரம்பூரில் குடியிருக்கிறேன். கீரம்பூரில் பண்டார தெருவில் நான் குடியிருக்கிறேன். நான் இருக்கும் வீட்டில் நான் ஒரு தனியறையிலும், என்கணவர் மற்ற பகுதிகளிலும் இருக்கிறார். 2ம் பிரதிவாதி மற்றொரு மகளும் திருப்பூரில் இருக்கிறார்கள். திருப்பூரில் 2ம் பிரதிவாதி எந்த தெருவில் குடியிருக்கிறார் என்று தெரியாது. அவர் வீடு தெரியும். அது வாடகை வீடாகும். வழக்கு போட்ட விவரத்தை என்கணவர் மற்றும் மகன் மற்றும் மகள்களிடம் சொன்னேன். சொன்னபிறகு தான் வழக்கு தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பத்திரங்களை நான் தான் எடுத்து தாக்கல் செய்துள்ளேன். நான் தான் பத்திர அலுவலகத்திற்கு சென்று விவரம் சொல்லி பத்திர நகல்களை வாங்கினேன். எந்த வருடம் வாங்கினேன் என்று ஞாபகமில்லை. தேர்முட்டி தெருவில் இருந்த பூர்விக வீட்டை விற்றாகிவிட்டது. அதை விற்றதற்கான பத்திர நகல் வீட்டில் உள்ளதா என்றால் இல்லை. அதன் நகல் என்னிடம் இல்லை. அதை என் மாமனார் மற்றும் கணவர் சேர்ந்து விற்றார்கள். கீரம்பூரில் குடியிருக்கும் வீடு என்மகன் பெயரில்

உள்ள வீடாகும். எங்கள் குடும்பத்தினற்கு வேறு சொத்துகள் கிடையாது. பத்திர நகல் வாங்கி சுமார் 3, 4 மாதங்களில் இந்த வழக்கு தாக்கல்செய்தேன். தாவா சொத்தை என்கணவரும் மகனும் விற்றவிவரம் தெரிந்தது. திருப்பூரில் வந்த பின்னர் தெரிந்தது. கடைசியாக தாவா சொத்திற்கு எப்போது சென்றேன் என்றால் சுமார் 10, 15 வருடங்களுக்கு முன்பு சென்றேன். திருப்பூரில் நான் வசித்து வந்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்போ அல்லது பின்போ பார்த்தேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் ஒருநாள் பார்த்தேன். தாவா சொத்தில் ஓட்டு வீடு, கிணறு, சுற்றிலும் வேலி, மின்சார இணைப்பு உள்ளது. கிணறு வெட்டியது நாங்கள். மற்ற அமைப்புகள் 3ம் பிரதிவாதி அமைத்ததாகும். மேற்படி சொத்திற்கு தனி வாசல் கதவு வைத்து 3ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு ஒரு மகன் உள்ளார். அந்த பேரனின் பெயர் வைசாக் ஆகும். மகள் வழியில் எனக்கு பேரப்பிள்ளைகள் உள்ளார்கள். நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்த விவரம் மகன் மற்றும் கணவருக்கு மகள், பேரப்பிள்ளைக்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பலாமா என்று என் கணவர் மற்றும் மகனிடம் நான் ஆலோசனை கேட்கவில்லை.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.